## 6–வது ஆண்டு நினைவு தினம்

# ஜெயலலிதா நினைவிடத்தில் எடப்பாடி மலர் வளையம்

**சென்னை, டிச.5–**

**மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் 6–வது ஆண்டு நினைவு தினம் இன்று தமிழகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. ஆங்காங்கே ஜெயலலிதா சிலை மற்றும் படங்களை அலங்கரித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.**

சென்னை மெரினா கடற்கரையில் எம்.ஜி.ஆர். நினைவிடம் அருகில் அமைந்துள்ள ஜெயலலிதா நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. வெளியூர்களில் இருந்து வந்த ஏராளமான ஆண்களும், பெண்களும் ஜெயலலிதா நினைவிடத்தில் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள்.

அண்ணா தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஏராளமான அண்ணா தி.மு.க. தொண்டர்கள் திரண்டு ஜெயலலிதா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்கள்.

காலையில் இருந்தே ஜெயலலிதா நினைவிடத்திற்கு அணிஅணியாக அண்ணா தி.மு.க. தொண்டர்களும் பொதுமக்களும் வந்து குவிந்தார்கள். கைகளில் கொடி, பேனர்களுடன் ஊர்வலமாக நினைவிடத்திற்கு வந்தார்கள். ஜெயலலிதா நினைவிடம் மற்றும் சாலை முழுவதும் தொண்டர்கள் வெள்ளமாக காட்சி அளித்தது.

எடப்பாடி பழனிசாமி ஜெயலலிதா நினைவிடத்திற்கு வந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அண்ணா தி.மு.க. அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், முன்னாள் அமைச்சர்கள் கே.பி. முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், செங்கோட்டையன், பி.தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, பொன்னையன், பா.வளர்மதி, கோகுல இந்திரா, நத்தம் விசுவநாதன், செம்மலை, என். தளவாய்சுந்தரம், டி.ஜெயக்குமார், டாக்டர் விஜயபாஸ்கர், உடுமலை ராதாகிருஷ்ணன், செல்லூர் ராஜூ, ஆர்.பி.உதயகுமார், வைகை செல்வன், பெஞ்சமின், மற்றும் கமலக்கண்ணன், எஸ்.ஆர். விஜயகுமார், ஜெயவர்த்தன், மாவட்ட செயலாளர்கள் நா.பாலகங்கா, விருகை வி.என்.ரவி, தி.நகர் சத்யா, வெங்கடேஷ்பாபு, ஆர்.எஸ்.ராஜேஸ், ஆதி ராஜாராம், கே.பி.கந்தன், மாதவரம் மூர்த்தி, அலெக்சாண்டர், முன்னாள் எம்.எல்.ஏ. கே.குப்பன், எம்.ஜி.ஆர். மன்ற இணை செயலாளர் ராயபுரம் ஆர்.மனோ, ஜெயலலிதா பேரவை மாநில துணைச்செயலாளர் பெரும்பாக்கம் ராஜசேகர், மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் பிராட்வே எம்.இஸ்மாயில் கனி, பகுதி செயலாளர்கள் வி.எம்.ஜி. முகுந்தன் கோபால், சேப்பாக்கம் சிவா, இலக்கிய அணி இணை செயலாளர் டி.சிவராஜ், துணை செயலா ளர்கள் இ.சி.சேகர், மலர்மன்னன், வழக்கறிஞர் ஆர். சதாசிவம், பி.ராஜேஸ் உள்பட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

### 2 நிமிட மவுன அஞ்சலி

ஜெயலலிதா நினைவிடத்தில் எடப்பாடி பழனிசாமி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய பின் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நினைவிட நுழைவு வாயில் அருகே அமைக்கப்பட்டு இருந்த மேடைக்கு வந்தார். அவருடன் அண்ணா தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் மேடைக்கு வந்தனர். அங்கு உறுதிமொழியை எடப்பாடி பழனிசாமி படித்தார். அதனை அங்கிருந்தவர்கள் திருப்பி சொல்லி ஏற்றுக்கொண்டார்கள்.



அண்ணா தி.மு.க. இடைக்காலப் பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று ஜெயலலிதாவின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அவரது திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



ஜெயலலிதா நினைவு நாளையொட்டி திருவொற்றியூர் பெரியார் நகரில் முன்னாள் எம்.எல்.ஏ. கே.குப்பன் தலைமையில் அலங்கரிக்கப்பட்ட ஜெயலலிதா உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் மற்றும் புடவைகளை முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான மாதவரம் மூர்த்தி வழங்கினார்.



ஜெயலலிதாவின் 6ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், பல்லாவரம் பகுதி கழகம் சார்பில் பகுதி கழக செயலாளர் த. ஜெயபிரகாஷ் ஏற்பாட்டில் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாவட்ட கழகச்செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன், துணைச் செயலாளர் ப. தன்சிங் ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பகுதி நிர்வாகிகள் குமார் ரவிச்சந்திரன், சந்தானம், கௌதம், செல்வம், சந்திரசேகர் ராஜா, சத்தியசீலன், விஜயகுமார், விசுவநாதன், ஞானசேகரன், பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அனைவரும் 2 நிமிடம் மவுனம் கடைப்பிடிக்குமாறு அண்ணா தி.மு.க. அவைத்தலைவர் ஆர்.தமிழ்மகன் உசேன் கேட்டுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து அனைவரும் 2 நிமிடம் மவுனம் அனுஷ்டித்தார்கள்.

### கே.குப்பன் அன்னதானம்

ஆண்டுதோறும் ஜெயலலிதா நினைவு நாளில் திருவொற்றியூரில் ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம், புடவைகளை முன்னாள் எம்.எல்.ஏ. திருவொற்றியூர் கே.குப்பன் வழங்கி வருகிறார். அதே போன்று இந்த ஆண்டும் நினைவு நாளையொட்டி திருவொற்றியூர் பெரியார் நகரில் ஜெயலலிதாவின் பிரமாண்டமான படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

அங்கு மாவட்ட செயலாளர் மாதவரம் மூர்த்தி, கே.குப்பன் மற்றும் நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் அங்கு ஆயிரம் பேருக்கு அன்னதானம் மற்றும் புடவைகளை இருவரும் வழங்கினார்கள்.

# நாடாளுமன்ற தேர்தலில்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று உறுதிமொழி எடுக்கப்பட்டது. மேடையில் எடப்பாடி பழனிசாமி உறுதிமொழியை படிக்க அங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான அண்ணா தி.மு.க. தொண்டர்கள் அந்த உறுதிமொழியை திரும்ப சொல்லி ஏற்றுக்கொண்டார்கள்.

### உறுதிமொழி

எடப்பாடி பழனிசாமி படித்த உறுதிமொழி வருமாறு:–★ அண்ணா தி.மு.க.வின் இதயமாய், இயக்கமாய் வாழ்ந்து, ஒப்பறியாத, ஒப்பற்ற ஓங்கு புகழ் கொண்டு, நம் இயக்கத்தை, கட்டிக் காத்து வளர்த்து, மக்களாட்சியின் மகத்துவத்தையும், மாண்பையும் எடுத்துரைத்த, புரட்சித் தலைவி அம்மாவின் வழியில், தொடர்ந்து பயணிப்போம்.

தடம் மாறாது, தடுமாறாது, நாம் கொண்ட கொள்கையில் லட்சியத்தோடு, வீறுநடை போடுவோம்; எதிரிகளை விரட்டியடிப்போம்; துரோகிகளை தூள் தூளாக்குவோம் என்று, வீர சபதம் ஏற்கிறோம்! வீர சபதம் ஏற்கிறோம்!

★ இந்திய அரசியலில், வரலாறாய் வாழ்ந்து, எவரும் தொடமுடியாத, வானமாய்த் திகழ்ந்த, நம் சிங்கநிகர் தலைவி; தமிழக அரசியல் வரலாற்றில், நிகரில்லா வெற்றிகளைத் தந்த, தங்கத் தலைவி; தமிழ் இனத்தின் தன்மானத்தைக் காக்க, துரோகிகளையும், எதிரிகளையும், வென்றெடுத்த வெற்றி மங்கை; தாய்க்குலத்தின் துயர் துடைத்த, தங்கமனம் கொண்ட கருணை தெய்வம்; எதிரிகளின் வியூகத்தை உடைத்தெறிந்து, வீரத்தோடு திகழ்ந்த வீரமங்கை; தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம், எதிரிகளின் சிம்ம சொப்பனமாய்த் திகழ்ந்திட்ட, நம்முடைய ஊனில், உணர்வில், உதிரத்தில், நாடி நரம்புகளில் கலந்திட்ட நம் அம்மா மறைந்திட்ட இந்நாளில், தொண்டர்களின் படை, பட்டாளம் ஆர்ப்பரிக்க, கடல்போல் உடன்பிறப்புகள், கடமை தவறாத உடன்பிறப்புகள், அம்மா மறைந்திட்ட இந்நாளில், வீரசபதமேற்க குவிந்திட்ட, கொள்கை வீரர்களை, வீராங்கனைகளை, பாரீர்! பாரீர்!

தீய சக்தியை விரட்டியடிக்க, தமிழ் நாடு தலைநிமிர, கழகத்தை நிறுவினார், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அத்தகைய கழகத்தை, கட்டிக் காத்து நின்ற, அம்மாவின் வழி நடக்க, உறுதி ஏற்கிறோம் ! உறுதி ஏற்கிறோம்

### குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம்

★ குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்பி, மக்கள் ஆட்சியை மலரச் செய்திட, தமிழ்நாடு, தலைசிறந்த மாநிலமாய்த் திகழ்ந்திட, பார் போற்ற, தமிழகம் சிறந்து விளங்கிட, அயராது உழைப்போம், அயராது உழைப்போம் என்று, உறுதி ஏற்கிறோம், உறுதி ஏற்கிறோம்.

★ நம் அம்மாவின் ஆட்சியிலும், அம்மாவின் நல்லாசியோடு, நடைபெற்ற கழக ஆட்சியிலும், அழகான தமிழ் நாடு, வளமான தமிழ்நாடு, கொலை இல்லை, கொள்ளை இல்லை, குடும்ப ஆட்சியும் இல்லை, மக்களின் மகிழ்ச்சிக்கோ, அளவே இல்லை, அளவே இல்லை.

அத்தகைய நல்லாட்சியை அமைப்பதற்கு, ஓய்வின்றி உழைப்போம், ஓய்வின்றி உழைப்போம் என்று, உறுதி ஏற்கிறோம்! உறுதி ஏற்கிறோம்!

★ பொய்யான வாக்குறுதிகளைத் தந்து, மக்களை ஏமாற்றி, போட்டோஷூட் ஆட்சியை நடத்தி வரும், பொம்மை முதலமைச்சர் ஆட்சிக்கு, முடிவு கட்டுவோம், முடிவு கட்டுவோம் என்று உறுதி ஏற்கிறோம்! உறுதி ஏற்கிறோம்!

### மக்களை ஏமாற்ற விட மாட்டோம்

★ ஆட்சிக்கு வந்தவுடன், நீட் தேர்வு ரத்தென்றார்; ஆட்சிக்கு வந்தவுடன், கல்விக் கடன் ரத்தென்றார்;

ஆட்சிக்கு வந்தவுடன், விலைவாசி குறையுமென்றார்; ஆட்சிக்கு வந்தவுடன், குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்றார்.

செய்தாரா? செய்தாரா? பொம்மை முதலமைச்சர் செய்தாரா? இதை, விடமாட்டோம்! விடமாட்டோம்! மக்களை ஏமாற்ற, விட மாட்டோம்! விடமாட்டோம்! பொம்மை முதலமைச்சரே! பொம்மை முதலமைச்சரே!

உங்கள் பொய் முகத்தைத், தோலுரித்துக் காட்டாமல், விடமாட்டோம், விடமாட்டோம் என்று உறுதி ஏற்கிறோம்! உறுதி ஏற்கிறோம்!

★ அம்மாவின் ஆட்சியிலும், அம்மாவின் நல்லாசியோடு, நடைபெற்ற கழக ஆட்சியிலும், மழை வந்தது; புயல் வந்தது. அப்போதெல்லாம் மக்களுக்கு, பல்வேறு வகைகளில், துணை நின்றோம், துணை நின்றோம், ஏணியாக நின்றோம், தோணியாகப் பணியாற்றினோம்;

தற்போதைய, பொம்மை முதலமைச்சரின் ஆட்சியிலே, பத்து நாள் மழைக்கே, தலைநகர் சென்னை, பரிதவித்தது; பரிதவித்தது. தெருவெங்கும் தண்ணீர், தேங்கி நின்றது; தேங்கி நின்றது. கடலோர மாவட்டங்கள் எங்கும், பெரும் சேதம்; பெரும் சேதம். மக்கள் விழிகளிலே கண்ணீர், கண்ணீர்! வீட்டுக்குள்ளே தண்ணீர், தண்ணீர்! தீயசக்தியின் ஆட்சியிலே, தண்ணீரும் வடியவில்லை; மக்களின் வாழ்வும், விடியவில்லை, விடியவில்லை. இந்த மக்கள் விரோத ஆட்சியை, மாற்றுவோம், மாற்றுவோம் என்று, உறுதி ஏற்கிறோம்! உறுதி ஏற்கிறோம்!

### அம்மாவின் திட்டங்களை நிறுத்தாதீர்கள்

★ அம்மாவின் ஆட்சியிலே, சிறப்பான திட்டங்கள் பல உண்டு. ஏழைகள் பசியாற, அம்மா உணவகங்கள்;

எளியவர்கள் நலம் பெற, அம்மா மருந்தகங்கள்; கிராமப்புற மாணவர்கள் வளம் பெற, மடிக் கணினி;

தாலிக்குத் தங்கம், பெண்களுக்கு இருசக்கர வாகனம்; இத்தகைய அற்புதமான திட்டங்களை முடக்கிப் போட்ட, தீயசக்தி ஆட்சியே, அம்மாவின் புகழை, மறைக்காதே, மறைக்காதே; மக்கள் நலத் திட்டங்களை, நிறுத்தாதே, நிறுத்தாதே; திமுக ஆட்சியின் கொட்டத்தை, அடக்குவோம், அடக்குவோம் என்று, உறுதி ஏற்கிறோம்! உறுதி ஏற்கிறோம்!

★ வழக்கு மேல் வழக்குகள், அத்தனையும் பொய் வழக்குகள், பொய் வழக்குகளைப் போட்டு, கழகத்தை, முடக்கிவிட முடியுமா? முடக்கிவிட முடியுமா? கழகத்தை, அழித்துவிட முடியுமா? அழித்துவிட முடியுமா?

எதிரிகள் ஒருபக்கம் என்றால், துரோகிகள் மறுபக்கம்; சதிவலைகளை அறுத்தெறிவோம்; பொய் வழக்குகளை முறித்தெறிவோம். குடும்ப ஆட்சியின், கொள்ளைக் கூட்டத்தை, வீட்டுக்கு அனுப்புவோம்; வீட்டுக்கு அனுப்புவோம் என்று, சபதம் ஏற்கிறோம்! சபதம் ஏற்கிறோம்!

★ அண்ணா தி.மு.க. என்பது, ஆயிரங்காலத்துப் பயிர்; ஆயிரங்காலத்துப் பயிர். தமிழ்நாட்டு மக்களுக்குத், தொண்டாற்றி, தொண்டாற்றி, தழைத்து நிற்கும் ஆலமரம். இதை அசைத்துப் பார்க்க முடியுமா? உடைத்துப் பார்க்க முடியுமா? கட்டிக் காப்போம்; கட்டிக் காப்போம், கழகத்தைக் கட்டிக் காப்போம்.

★ இந்திய சரித்திர வானில், நாடாளுமன்றத்தின், மூன்றாவது பெரிய கட்சியாக, கழகத்தை மாற்றியவர், நம் புரட்சித் தலைவி அம்மா. வருகிறது வருகிறது, நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வருகிறது.

### நாற்பதும் நமதே என சூளுரைப்போம்

இத்தேர்தலில், வெற்றிக் கூட்டணி, மெகாகூட்டணி அமைத்து, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றிட, சூளுரைப்போம்! சூளுரைப்போம்! நாற்பதும் நமதே, நாளையும் நமதே என்று, வீர சபதமேற்கிறோம்! வீர சபதமேற்கிறோம்!

★ இப்படை தோற்கின் எப்படை வெல்லும், வெற்றி முழக்கம்! வெற்றி முழக்கம் என்றே,

திக்கெட்டும் வெற்றியைப் படைத்திடுவோம்; திசையெட்டும் வெற்றிக் கொடியை நாட்டிடுவோம்!

அதற்காக, அயராது உழைத்திடுவோம்! அயராது உழைத்திடுவோம்! கழகத்தின் வெற்றிக்காக, எத்தகைய தியாகத்தையும், செய்திடுவோம்! செய்திடுவோம் என்று உறுதி ஏற்கிறோம்! உறுதி ஏற்கிறோம்!

★ தமிழ்நாடு தழைக்க, தமிழ்நாடு தழைக்க, உழைத்திடுவோம்! உழைத்திடுவோம்!

புரட்சித் தலைவரின் பெரும் புகழையும், புரட்சித் தலைவியின் பெரும் புகழையும், எந்நாளும் போற்றிடுவோம்; போற்றிடுவோம்! களங்கள் அனைத்திலும், வென்றிடுவோம்! வென்றிடுவோம்;

கழகத்தை இமயமாய் உயர்த்திடுவோம்! உயர்த்திடுவோம் என்று உளமார உறுதி ஏற்கிறோம்! உளமார உறுதி ஏற்கிறோம்! வாழ்க, அண்ணாவின் புகழ். வளர்க, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் பெரும் புகழ்.

ஓங்குக, நம் புரட்சித் தலைவி அம்மாவின் நெடும் புகழ். வெல்க! வெல்க!! வெல்கவே!!

அண்ணா தி.மு.க. என்றும் வெல்க, வெல்க, வெல்கவே!

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி உறுதிமொழியை படித்தார்.

# தங்கம் சவரனுக்கு ரூ.232 உயர்வு

**சென்னை, டிச.5–**

**சென்னையில் ஆபரணத் தங்கம் சவரனுக்கு ரூ.232 உயர்ந்து ரூ.40,360க்கு விற்பனை**

தங்கம் விலை கடந்த வாரக் கடைசியில் குறைந்திருந்த நிலையில் இன்று சவரனுக்கு ரூ.232 உயர்ந்துள்ளது.

முக்கிய பண்டிகை நாட்கள், திருமணங்கள் அதிகம் நடைபெறும் சுப முகூர்த்த மாதங்கள் மற்றும் நாட்கள் போன்ற சந்தர்ப்பங்களில் தங்கத்தின் விலை அதிகரிக்கும்.

இன்று காலை நிலவரப்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.232 உயர்ந்து ரூ.40,360க்கு விற்பனை செய்யப்படுகிறது. சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.29 உயர்ந்து ரூ.5,045க்கு விற்பனையாகிறது. சென்னையில் ஒரு கிராம் வெள்ளியின் விலை 90 காசுகள் அதிகரித்து ரூ.72.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. பங்குச்சந்தையில் வர்த்தகம் தொடர்ந்து ஏற்றத்துடன் நகர்வது, சர்வதேச சந்தை சூழல் சாதகமாக இருப்பதால், தங்கம் விலை உயர்ந்து வருகிறது.

## மாணவி ஸ்ரீமதி உயிரிழந்த சம்பவத்தால் சூறையாடப்பட்ட

# கனியாமூர் தனியார் பள்ளி 145 நாட்களுக்கு பின் திறப்பு

## 9 முதல் 12ம் வகுப்பு மாணவர்கள் ஆர்வமுடன் வந்தனர்

**கள்ளக்குறிச்சி, டிச. 5–**

**மாணவி ஸ்ரீமதி உயிரிழந்த சம்பவத்தால் சூறையாடப்பட்ட கனியாமூர் தனியார் பள்ளி 145 நாட்களுக்குபின் 9 முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இன்று திறப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மாணவர்கள் ஆர்வமுடன் பள்ளிக்கு வந்தனர்.**

கள்ளக்குறிச்சி மாவட்டம் கனியாமூர் தனியார் பள்ளி மாணவி ஸ்ரீமதி மரணத்திற்கு நீதி கேட்டு நடைபெற்ற போராட்டம் கடந்த ஜூலை 17ந்தேதி கலவரத்தில் முடிந்தது. இதில் வகுப்பறையில் இருந்த பொருட்கள் சேதமானதால் பள்ளி மூடப்பட்டது. இந்த நிலையில், பள்ளி வளாகம் முழுவதும் சீரமைக்கப்பட்டு விட்டதாகவும், அரசு அமைத்த குழுவும் ஆய்வு செய்துவிட்டதால், பள்ளியைத் திறக்க அனுமதிக்க வேண்டும் என்று அந்த பள்ளியை நிர்வகிக்கும் தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை முடிவில், 9 முதல் பிளஸ் 2 வகுப்பு வரை ஒரு மாத காலத்துக்கு நேரடியாக வகுப்புகளைத் தொடங்க பள்ளி நிர்வாகத்துக்கு அனுமதியளித்து நீதிபதி உத்தரவிட்டார். மேலும் ஒரு மாதத்திற்குப் பிறகு அப்போதைய நிலைமையை ஆராய்ந்து நீதிமன்றம் முடிவெடுக்கும் என்றும் எல்.கே.ஜி. முதல் 8 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு நேரடி வகுப்புகள் குறித்து பின்னர் முடிவெடுக்கப்படும் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

கனியாமூர் பள்ளியைத் திறப்பதற்கு பள்ளிக்கல்வித்துறை, காவல்துறை, மாவட்ட நிர்வாகம் எதிர்ப்பு தெரிவிக்காததையடுத்து பொதுத்தேர்வை எதிர்நோக்கியுள்ள மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட நீதிபதி, இன்று முதல் நேரடி வகுப்புகளை நடத்த அனுமதி அளித்தார்.மேலும், பள்ளியில் உள்ள ஏ பிளாக்கின் மூன்றாவது தளத்தை சீல் வைக்க மாவட்ட கலெக்டருக்கு உத்தரவிட்டனர். அதன்படி, மாவட்ட கலெக்டர் ஷ்ரவன்குமார் முன்னிலையில் கனியாமூர் தனியார் பள்ளியின் 3வது தளத்தினை பூட்டி இன்று சீல் வைக்கப்பட்டது.

இந்நிலையில், 145 நாட்களுக்கு பிறகு, கள்ளக்குறிச்சி கனியாமூர் தனியார் பள்ளி இன்று திறக்கப்பட்டது. பள்ளி முகப்பில் தோரணம், வாழைமரம் கட்டி மாணவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் இன்று ஆர்வமுடன் பள்ளிக்கு வந்தனர். அவர்கள் தங்களது நண்பர்களை பார்த்ததும் ஒருவொருக்கொருவர் நலம் விசாரித்து மகிழ்ச்சியுடன் வகுப்பறைக்குள் சென்றனர். ஆசிரியர்களும் நீண்ட இடைவெளிக்கு பின்னர் மாணவர்களை நேரடியாக சந்திப்பதால் இன் முகத்துடன் மாணவர்களை வரவேற்றனர்.


### பெயர் மாற்றம்

Given Name: Hariharan Surname: Shanker Senthilkumar, தந்தை பெயர்: Senthilkumar, பிறந்த தேதி: 10.08.2005, 18, வேதா நகர், சின்மயா நகர் ஸ்டேஜ்–2, விருகம்பாக்கம், சென்னை – 600 092 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி Given Name: **HARIHARAN** Surname: **SENTHILKUMAR** என்று அழைக்கப்படுகிறேன்.

Given Name: Hariharan
Surname: Shanker
Senthilkumar

### பெயர் மாற்றம்

Pazhanivel Maheswari, தந்தை பெயர்: Pazhanivel, பிறந்த தேதி: 21.05.1997, நெ.5, கவி கம்பர் சாலை, சேக்கிழார் நகர், குன்றத்தூர், சென்னை – 600069 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **PAZHANIVEL MAHESHWARI** என்று அழைக்கப்படு கிறேன்.

Pazhanivel Maheswari

### Original Land/Property Document Lost

I, K.Chandrammal Would like to inform the General Public that I have lost my original Sale Deed of my Property Document No.233/1991 has registered by SRO office of Vadapalani TS No.65, 13/2 Puliyur Village, Sasthri Nagar, 100ft Road, Vadapalani, Chennai–600026. If any one find it kindly contact me at 8680077329 with in 15 days from the date of issue of this address.

### மார்க்கெட் சிம்பிளிபைடு இந்தியா லிமிடெட்

CIN: U72900TN2000PLC045869

பதிவு அலுவலகம் : 13வது தளம், ஜெனித் பில்டிங், அசென்டாஸ் சர்வதேச தொழில்நுட்ப பூங்கா, சிஎஸ்ஐஆர் சாலை, தரமணி சென்னை 600113. தொலைபேசி : 044 61703090

Website : https://www.marketsimplified.com/

**வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு தகவல்**

கூட்டப்பட உள்ள வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கண்டுள்ள அலுவல்கள் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்வதற்காக நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான 22வது (இருபத்திரெண்டாவது) வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM) திங்கட்கிழமை, 26 டிசம்பர், 2022 அன்று காலை 10.00 (இந்திய நேரப்படி), காணொலி காட்சி (VC)/பிற ஆடியோ காட்சி முறையில் (OAVM) நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் வெளியிட்ட பொதுச் சுற்றறிக்கைகள், ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.17/2020, மே 05, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.20/2020, ஜனவரி 13, 2021 தேதியிட்ட தேதியிட்ட சுற்றறிக்கை எண்.02/2021, டிசம்பர் 8, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.19/2021, டிசம்பர் 14, 2021 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.21/2021 மற்றும் மே 5, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண்.2/2022, நிறுவனங்கள் சட்டம் 2013–ன் தொடர்புடைய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர அறிக்கையுடன் 2021–22 நிதி ஆண்டிற்கான வருடாந்திர பொதுக் கூட்டம் கூட்டுவதற்கான அறிவிப்பு ஆகியவற்றை நிறுவனம், வெள்ளிக்கிழமை, 2 டிசம்பர், 2022 அன்று மின்னணு முறையில் நிறுவனம் மற்றும்/அல்லது டெபாசிட்டரிகளிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி உள்ளது. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்புடன் வருடாந்திர அறிக்கையின் நகல் நிறுவனத்தின் இணையதளத்திலும் (https://www.marketsimplified.com/) சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) இணையதளத்திலும் (www.evotingindia.com) கிடைக்கும்.

**மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யும்/புதுப்பிக்கும் முறை:**

a) காகித வடிவில் வைத்திருக்கும் பங்குதாரர்கள் – ஃபோலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்), பான் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) போன்ற தேவையான விவரங்களை நிறுவனத்திற்கு (saraswathy.a@marketsimplified.com /ஆர்டிஏ மின்னஞ்சல் முகவரி (btschennai@gmail.com)–க்கு மின்னஞ்சல் மூலம் வழங்கவும்.

b) மின்னணு வடிவில் வைத்திருக்கும் பங்குதாரர்கள் – தயவு செய்து டீமேட் கணக்கு விவரங்களை (CDSL16 இலக்க பயனாளி ஐடி அல்லது NSDL16 இலக்க DPID + CLID), பெயர், கிளையன்ட் மாஸ்டர் அல்லது ஒருங்கிணைந்த கணக்கு அறிக்கையின் நகல், பான் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை நிறுவனத்திற்கு (saraswathy.a@marketsimplified.com/ஆர்டிஏ மின்னஞ்சல் முகவரி (btschennai@gmail.com)–க்கு வழங்கவும்.

**தொலைதூர மின்னணு வாக்களிப்பு குறித்த தகவல்:** வருடாந்திர பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்களின் மீது மின்னணு முறையில் வாக்களிக்கும் உரிமையை அதன் உறுப்பினர்களுக்கு வழங்குவதில் நிறுவனம் மகிழ்ச்சியடைகிறது. நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 108 மற்றும் நிறுவனங்கள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள், 2014–ன் விதி 20 ஆகியவற்றுக்கு இணங்க, கட்ஆப் தேதி, அதாவது டிசம்பர் 19, 2022 திங்கட்கிழமையன்று பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், www.evotingindia.com–ல் CDSL–ன் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் பொதுக்குழு கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீதும் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட்ஆப் தேதியின்படி நிறுவனத்தின் செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனத்தில் அவர்கள் வைத்திருக்கும் சம பங்குகளின் விகிதத்தில் இருக்கும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு **வியாழக்கிழமை, டிசம்பர் 22, 2022 (இந்திய நேரப்படி காலை 9.00 மணி) அன்று துவங்கி ஞாயிற்றுக்கிழமை, டிசம்பர் 25, 2022 (இந்திய நேரப்படி மாலை 5.00 மணி) அன்ற முடிவடைகிறது.** இந்தக் காலகட்டத்தில், உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். அதன் பின்னர் மின்னணு வாக்குப்பதிவு தொகுதி CDSL–ஆல் நிறுத்தப்படும்.

தொலைதூர மின்னணு வாக்களிப்பு செயல்முறை மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தன்று மின்னணு வாக்களிப்பு முறைக்கான வழிமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் பதிவேட்டிலோ அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டிலோ கட்ஆப் தேதி, அதாவது டிசம்பர் 19, 2022 திங்கட்கிழமை அன்று பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கும் நபர் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதியையும் வருடாந்திர பொதுக் கூட்டத் தேதியில் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியையும் பெறத் தகுதியுடையவர். VC/OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் தீர்மானங்களில் வாக்களிக்காதவர்கள், வருடாந்திர பொதுக் கூட்டக் காலத்தில் மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள். வருடாந்திர பொதுக் கூட்டத்துக்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்/பங்கேற்கலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள். வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பின் குறிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வழிமுறைகளையும் குறிப்பாக, வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான வழிமுறைகளையும், தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிப்பதையும் உறுப்பினர்கள் கவனமாக படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிறுவனத்தால் மின்னணு முறையில் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, பங்குகளைப் பெற்று நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்ஆப் தேதியின்படி பங்குகளை வைத்திருக்கும் எவரும்; helpdesk.evotingindi@cdslindia.com–க்கு கோரிக்கையை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். இருப்பினும், அவர் ஏற்கனவே CDSL–ல் தொலைதூர மின்னணு வாக்களிப்புக்காக பதிவு செய்திருந்தால், வாக்களிக்க அவர் ஏற்கனவே இருக்கும் பயனர் முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம்.

மின்னணு வாக்களிப்பது தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால் அது குறித்து, www.evotingindia.com–ல் உதவிப் பிரிவின் கீழ் உள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQகள்") மற்றும் மின்னணு வாக்களிப்பு கையேட்டை பார்க்கவும். மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியுடன் தொடர்புடைய அனைத்து குறைகள் குறித்தும், திரு. ராகேஷ் தல்வி, மேலாளர் (CDSL), சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட், ஏ விங், 25வது தளம், மராத்தான் ஃபியூச்சர்க்ஸ், மஃபத்லால் மில்ஸ் காம்பவுண்ட், என் எம் ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை 400 013–ல் தொடர்பு கொள்ளலாம் அல்லது அது குறித்து helpdesk.evoting@cdslindia.comக்கு எழுதலாம் அல்லது 180022553 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

**குழு உத்தரவுப்படி**
**மார்க்கெட் சிம்பிளிபைடு இந்தியா லிமிடெட்டிற்காக**
**ஒப்பம்/–**
**சரஸ்வதி**
**நிறுவனச் செயலாளர்**

**இடம் : சென்னை**
**தேதி : 05.12.2022**